DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

DVC.No.2/2022

Deposition of witness: PW3

| Name | பொற்கொடி | Taluk | |
|---|---|---|---|
| Husband 's Name | வெங்கடேசன் | Village | |
| Age | 55 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **06.03.2026.** | | | |

(R1 present, R2 to R6 absent, U/s.317 PFA)

**முதல் விசாரணை**

1. அ.சா–1 எனது உடன் பிறந்த தங்கை ஆவார். ஜெயக்குமாரிக்கு ஏற்கனவே திருமணமாகி, விவாகரத்தான விஷயத்தை எதிர்மனுதாரரின் குடும்பத்தாரிடம் கூறி, அவர்கள் சம்மதத்துடன் அ.சா–1ற்கும், எதிர்மனுதாரர் முரளிக்கும் திருமணம் செய்து வைத்தோம், திருமணத்திற்கு எதிர்மனுதாரரின் குடும்பத்தார் 15 சவரன் தங்க நகை கேட்டார்கள், ஆனால், நாங்கள் 13 சவரன் போட்டு, ரூ.62,500/– எதிர்மனுதாரருக்கு இருசக்கர வாகனம் வாங்குவதற்காக ரொக்கமாக கொடுத்து, அதோடு கட்டில், பீரோ, வாஷிங்மெஷின், பிரிட்ஜ், மிக்சி, கிரைண்டர் இன்னும் சில வீட்டு உபயோக பொருட்கள் ரூ.3,00,000/– செலவு செய்து, வாங்கி கொடுத்து மேற்படி திருமணத்தை செய்து வைத்தோம். அதன் பிறகு, எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார், முக்கியமாக அவரது அம்மாவும், தங்கையும் அ.சா–1ஐ திட்டி, அடித்து சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் துன்புறுத்தி, சித்தரவதை செய்து வந்தனர்.

**2.** இந்நிலையில், எதிர்மனுதாரர் சீட்டு கட்டுவதற்காக பணம் வேண்டும் என்று கூறி அதற்காக, அ.சா–1 றிடமிருந்து, நகை கேட்டுள்ளார். எங்களிடம் இதுப்பற்றி அ.சா–1 கூறிவிட்டு, கணவன் தானே என்ற முறையில் ஒரு நெக்லசையும், சங்கிலியையும் எதிர்மனுதாரரிடம் கொடுத்துள்ளார். அதனை சிறிது நாட்கள் கழித்து, ஒரு திருமணத்திற்கு போக வேண்டும் என்று கூறி, அ.சா.1 எதிர்மனுதாரரிடம் கேட்டபோது, எதிர்மனுதாரர், சங்கிலியை மட்டும் கொடுத்துள்ளார். அதன் பிறகு, மீண்டும் எதிர்மனுதாரர், பணம்வேண்டும் என்று, கேட்டபோது, மேற்படி சங்கிலியை அடமானம் வைத்து பணத்தை கொடுக்கலாம் என்று அ.சா.1 நினைத்து அதனை வட்டி கடைக்கு கொண்டு சென்று பார்த்தபோது, மேற்படி தங்க சங்கிலியை ஏற்கனவே எதிர்மனுதாரர் அ.சா.1க்கு தெரியாமல் விற்றுவிட்டு, அதற்கு பதிலாக கவரிங் சங்கிலியை வைத்திருந்தள்ளார் என்பது அதனை சோதித்து பார்த்தபோது தெரியவந்தது. அதுப்பற்றி, எங்களிடம் அ.சா–1 கூறினார். நாங்கள் அதுப்பற்றி என்னவென்று பஞ்சாயத்து செய்து கேட்டபோது, எதிர்மனுதாரர் வீட்டினர் பெண்ணை அழைத்துக்கொண்டு சென்றுவிடுமாறும், பொருட்களையும், நகைகளையும் திருப்பி கொடுத்துவிடுமாறும் கூறினார்கள். நாங்கள் பஞ்சாயத்து செய்து, அ.சா–1ஐ அவர்கள் வீட்டிலேயே விட்டுவிட்டு வந்தோம். அதன்பிறகு, மீண்டும், பிஸ்னஸ் செய்ய போவதாக கூறி, எதிர்மனுதாரர் அ.சா–1டம் 5 பவுன் நகையும், பணமும் வேண்டும் என்று கேட்டு

தொந்தரவு செய்துள்ளார். அவ்வாறு, பணம் கொடுக்காதபட்சத்தில் கேஸை திறந்துவிட்டு, அ.சா–1ஐ கொன்றுவிடுவதாக மிரட்டியதோடு மட்டுமல்லாமல், அவ்வாறு செய்து, அ.சா–1 இறந்துவிட்டால், அனைவரும் வரும்போது ஊர் மக்களுக்கு முன்பாக பெரிய மாலையாக அ.சா–1ற்கு போட்டு, உருண்டு, புரண்டு அழுவேன் என்று கூறியுள்ளார். அதன் பிறகு, எதிர்மனுதாரர் செய்த சித்திரவதை தாங்காமல், அ.சா–1 எங்களுக்கு போன் செய்து, கூறினார். உடனே நாங்கள் சென்று அவரை பஞ்சாயத்து செய்து பேசிவிட்டு, கட்டிய துணியுடன் மட்டும் அவரை எங்கள் வீட்டிற்கு கூட்டிவந்தோம். தற்போது, அ.சா–1 எங்களுடன் தான் உள்ளார். எங்களுக்கு வயதான அம்மா மட்டும் தான் உள்ளார், அப்பா இறந்துவிட்டார். எங்கள் தம்பியும் கூலி வேலைக்கு தான் செல்கிறார். எனவே, நாங்கள் 3 அக்கா, தங்கைகள் சேர்ந்து தான் அ.சா–1ஐ இரண்டு, இரண்டு மாதம் எங்கள் வீட்டில் வைத்து பார்த்துக்கொள்கிறோம்.

(எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் இவ்வழக்கானது எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக நிபந்தனையின் பேரில் அடுத்த தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).